செம்மண்

நிலம் 3 துகள் 152 வள்ளுவர் ஆண்டு 2052, 17 - 23 ஆனி 2023 வாரமலர் பக்கங்கள் 17



ஜெயந்தன்

# வேள்வி என்கிற பாரம்பரிய வணிகம்



வலிகாம் வடக்கிலுள்ள கவுணாவத்தை என்ற ஊர்ப்பெயரைக் கேட்டதும் நமக்கெல்லாம் ஞாபகத்துக்கு வருவது அங்கு நடக்கும் வேள்வியே. வருடா வருடம் நூற்றுக்கணக்கான கிடாய் ஆடுகளை அங்குள்ள நரசிங்க வைரவர் கோவிலில் வைத்து அறுத்து விற்பதைக் கேள்விப்படாதவர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்றே கூறலாம். அதை ஆதரிக்கும் கூட்டத்தினருக்கும் எதிர்க்கும் கூட்டத்தினருக்கும் இடையில் நடக்கின்ற வாதப் பிரதிவாதங்கள், சல சலப்புகளால் இந்த வருடம்கூடச் சமூக வலைதளங்களில் கவுணாவத்தை வேள்வி பெரும் பேசுபொருளாகியிருந்தது. ஆடுகளை அறுத்து விற்கும் இடம் கோவிலாகக் காணப்படுவதே இதைப் பிரச்சினையாக உருவகிப்பவர்களை உருவாக்கி விட்டிருக்கிறது. என்னதான் இருந்தாலும் இந்த ஆடு அறுக்கும் கொலைக்களம் அடிப்படையில் ஒரு மாபெரும் விற்பனைச் சந்iதையாகவே காணப்படுகிறது.

**மிக நீண்டகால பின்னணி**

கிடாய் ஆடுகளை வழிபாட்டிடங்களில் வைத்துக் கொல்லும் வழக்கம் மிக நீண்டகாலமாகவே யாழ்ப்பாணத்தில் நடந்து வருவது தெரிகிறது. கிராமியஈ பாரம்பரியத் தெய்வங்களை வழிபட்ட மக்கள் இவ்வாறு உயிர்ப் பலிச் சடங்கை நிகழ்த்துவதை வழமையாகக் கொண்டிருந்தனர். பிராமணர்களின் வருகையும், சமய வளர்ச்சி என்கிற பெயரில் எழுழுந்த இந்தியத் தொடர்புகளும், சமய அரசியல் கொள்கையாளர்களாலும் பிற்பட்ட காலத்தில் கிராமியத் தெய்வ வழிபாடு உருக்குலைந்து போயிற்று. இப்போது ஆங்காங்கே எஞ்சியிருக்கும் அந்த வழிபாட்டுச் சடங்குகளைப்



பின்வந்த மதவாதிகள் விமர்சிப்பது அதிகரித்து விட்டது.

**என்ன சொல்கிறார்கள் கவுணாவத்தை மக்கள்...?**

கவுணாவத்தையைச் சேர்ந்த கிடாய் வளர்ப்பாளர், தங்கராசாவுடன் உரையாடியபோது, 'எங்கட சந்ததியில் கிடாய் வளர்க்கும் 14ஆவது சந்ததியைச் சேர்ந்தவன் நான். ஒவ்வொரு வேள்விக்கும் 2 கிடாய்களைக் கொண்டு வருவேன். முன்பு ஒரு லச்சம் போன கிடாய் தற்போது 5 லச்சம் அளவில் விற்கப்பட்டுகிறது' - என்றார். 14ஆவது சந்ததி தாண்டித் தொடரும் இந்தச் சடங்கை இன்றைய இந்துமத வாதிகளில் பலர் எதிர்ப்பது ஆச்சரியத்துக்குரியது.

கவுணாவத்தையைச் சேர்ந்த இன்னொர் ஆடு வளர்ப்பாளர் மாணிக்கவேல். அவர் கூறுகையில், 'ஒரு கிடாயைப் பலிபீடத்துக்குக் கொண்டு வருவதற்கு இரண்டு வருடங்கள் வரை வைத்து அதை வளர்க்க வேண்டும் ஆட்டுக் குட்டியை வாங்கி 6 மாதங்கள் கடுமையாகக் கஸ்ரப்பட்டு வளர்க்கவேண்டியிருக்கும். பிள்ளைக்குச் சாப்பாடு தீத்துவதுபோல தீனி கொடுப்பேன். அதற்காக உழுந்து, வெந்தயம் புண்ணாக்கு, சணல் கொட்டை ஆகியவற்றை வாங்கவேண்டியிருக்கும். தற்போது அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக் கிறது. இந்த வேள்விக் கிடாய்களுக்கு மாஸ் போன்ற தீனிகளை வைக்க முடியாது' என்றார். அந்தப் பகுதியைச் சேர்ந்த மற்றொருவர் கூறுகையில், 'இதையொரு வருமானமாகப் பார்த்தால் அது நட்டம்தான். கிடாயுடன் நாங்கள் ஒரு நாளைக்குச் செலவிடும் நேரம், அதைப் பராமரிப்பதற்கான செலவு எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எங்கட கிடாயும் வேள்விக்குப் போனது என்பதே பெருமை. அது மன நிறைவாக இருக்கும். வைரவருக்கு நேர்த்தி வைத்துப் பத்திரமாக வளர்த்து வைரவற்ற சந்திதானத்தில கொண்டுபோய்ப் பலி கொடுப்பதில் திருப்திப்படுகிறோம்.' என்றார். இவற்றிலிருந்து நோக்குகையில் இந்தக் கிடாய் வளர்ப்புக்குப் பின்னால் வருமானம் பற்றிய எதிர்பார்ப்பும் வணிக முயற்சிகளும் இருப்பது தெரிகிறது. இவற்றுக்கு அப்பால் இந்த வேள்விக் கிடாய் வளர்ப்பவர்களிடம் ஒரு தொழில் தர்மமும் இருக்கிறது என்று தெரிகிறது. கிடாயைக் கோவிலுக்கு நேர்ந்து விட்ட பின் அதை வேறொருவருக்கு விற்க மாட்டார்கள். வேள்விக்குக் கொண்டு செல்ல முன்னர் அந்தக் கிடாய் ஆடு இறந்துவிட்டால் அதை வெட்டிப் பங்குபோடவோ விற்கவோ மாட்டார்கள். கிடங்குவெட்டிப் புதைப்பார்கள்.

**தொழில் முயற்சி**

கோவிலின் பெயரால் கிடாய் வளர்ப்பதால் அதைக் கைவிடாமல் தொடர்ச்சியாக ஒரு தொழில் முயற்சியாகப் பேணி வருகின்றனர். அது ஒரு மரபுவழி நடவடிக்கையாகவோ நம்பிக்கையாகவோ கடவுளுக்குப் பயமாகவோ ஏனைய கிடாய் வளர்ப்பாளர்களுக்குப் போட்டியாகவோ என ஏதோ ஒரு காரணத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பலிக்கிடாய்கள் பாரம்பரியம் மாறாதுள்ள கிராமங்களிலேயே வளர்க்கப்பட்டு வருகின்றன. வேலியில் குழைகள் வெட்டி வைப்பது, கொட்டில்கள் போட்டுப் பாதுகாப்பது, நாட்டு வைத்தியங்கள் எனப் பாரம்பரியமாக நம் மத்தியிலுள்ள நல்ல இன ஆடுகளை அழியவிடாது பாதுகாத்தல் எனப் பல விடயங்கள் இந்தா வேள்விக்கிடாய் வளர்ப்பு என்ற விடயத்தில் உள்ளடங்கியுள்ளன. இது ஒரு கலை. பலர் தமது பாடசாலைக் கல்வியை இடையில் கைவிட்டு வேள்விக் கிடாய்களை வளர்ப்பதில் முழு நேரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இந்தத் தொடர் முயற்சியே இலங்கையில் பல பாகங்களில் வாழ்கின்ற மக்களையும் வெளி நாடுகளில் வாழ்கின்ற பலரையும் வேள்விக்காலத்தில் கவுணாவத்தைக் கிராமத்தை நோக்கிக் கவர்ந்திழுக்கிறது. .இதைவிட மிகப் பெரிய வர்த்தக சந்தையாகவும் பலிக் கடாக்களின் விழாவாகவும் காணப்படுகிறது.

**பல வேள்விக் கோவில்கள்**

யாழ்ப்பாணத்தில் கவுணாவத்தை வேள்விக் கோவில் தலையாய ஒன்றாகக் காணப்பட்டாலும் பிரான்பற்று, அராலி, தெல்லிப்பளை, இளவாலை, அளவெட்டிப் பகுதிகளிலும் வேள்விக் கோவில்கள் காணப்படுகின்றன. இவற்றில் வருடா வருடம் சித்திரை, வைகாசி மாதங்களில் கிடாய்கள் பலிகொடுக்கப்படுகின்றன. கவுணாவத்தையில் ஆயிரம் கோழிகளும் ஆயிரம் கிடாய்களும் பலிகொடுக்கும் வழக்கமுள்ளது. இந்த மிருகங்களைப் பலி கொடுத்த பின் அந்தக் கோவிலுக்கு ஒரு வாரம் வரை யாரும் செல்வதில்லை. 8ஆம்நாள் மடையின்போதே அங்கு மக்கள் செல்கின்றனர்.

இந்த வேள்விக் கிடாய்களை இனப் பெருக்க முயற்சிக்காகப் பெண் ஆட்டுடன் இணைய விடுவதில்லை. சில ஆடுகள் 200கிலோ வரை வளர்ந்து அதிகம் கொழுப்பு வைத்து நடக்கமுடியாத நிலைக்குச் செல்வதும் உண்டு. இவற்றின் தலையை வெட்டிக் குருதி வடிந்த பின் அந்த இறைச்சியை வெட்டியெடுப்பதால் ருசி கூடவிருக்கும் என்றும் வாசம் அதிகமாக இருக்கும் என்றும் இறைச்சியைக் காய்ச்சும்போது அதிகம் பொலியும் என்றும் பலர் கூறுகின்றனர்.
இத்தகைய வேள்விக் கோவில்களைத் தவிர, உலகம் முழுதும் தினமும் ஆயிரக்கணக்கான ஆடுகளும் மாடுகளும் வெட்டப்படுகின்றன. உலகிலேயே மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்கின்ற முன்னணி நாடாக இந்தியா காணப்படுகிறது.

**கால் நடைத் திணைக்கள உதவிகள்**
வேள்விக் கிடாய்களை வளர்ப்பவர்கள் அதன் உணவுக்கான உள்ளீடுகளை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருப்பதால் கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தினர் இவற்றுக்கான உணவுப் பொருள்களை மானிய விலைக்கு விற்கும் ஏற்பாட்டை மேற்கொண்டு இந்தத் துறையை மேலும் வளர்க்க முடியும். அதவேளை இந்த ஆட்டிறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். வேள்விக் கிடாய்கள் 2வருடங்கள் கைத்தீனி கொடுத்து வள்ர்க்கப்படுவதாலேயே அவற்றின் இறைச்சி சாதாரண கிடாய் இறைச்சிகளை விட ருசியாகவும் மணமமாகவும் இருக்கிறது.



அன்பாகக் கைத்தீனி கொடுத்து வளர்க்கப்படுகின்ற கிடாய்கள் பலிகொடுக்கப் படும் வரை தனது எஜமான் தன்னைக் கொல்ல மாட்டான் என்றே நம்புகின்றன. இறப்பதற்கு முதல்நாள்கூட தம்மை ஒரு வேடிக்கை விநோத நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்வதாகவே அவை நம்புகின்றன. வேள்விக்கு முதல்நாள் இரவு வேள்விக் கிராமங்களின் வீதிகள் கோவில் திருவிழாக்கள் போல மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு கிடாய்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் வரிசையாகப் பவனி வரும் காட்சி வேறெங்கும் காணக் கிடைக்காத ஒன்று.
அவை வளர்க்கப்படும் வீடுகளில் இருந்து வெளியேறிச் செல்லும் முதல் பயணமே அது. அது கொலைப்பயணம் அல்லது பலியாகும் பயணம் என்பதை அந்தக் கிடாய்கள் அறிய வாய்ப்பில்லை. இந்தக் கிடாய் ஆடுகள் வாழும்போது பலருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. இறுதி ஊர்வலத்தின் போதும் பலருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. இறந்த பின் சுவையான இறைச்சியாக மாறிவிடுகின்றன. வளர்த்த எங்களைக் கொல்வது என்ன நியாயம் என்று கிடாய்களின் பக்கமிருந்து கிடாய்களோ, ஜீவகாருண்யம் மிக்கவர்களோ நியாயம் கேட்டால்கூடப் பதிலளிக்கலாம் என்று முடிவெடுத் தால், இந்து மதவாதிகள் இதுவிடயத்தில் கேள்வி கேட்கத் தகுதியற்றவர்கள் என்பதே முடிந்த முடிபு.





# ஜெட் லைனர் கப்பல் சேவை

மொழியாக்கம்
கமலநாதன்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

அரசிடமிருந்த ஜெட் லைனர் என்ற கப்பல் படையினருக்கான பல சேவைகளில் முக்கிய இடம் வகித்தது. அதில் ஒரே தடவையில் 5ஆயிரம் சிப்பாய்களை ஏற்றிச்செல்லும் வசதியிருந்தது. இந்தக் கப்பலைப் பல தடவைகள் கடற்புலிகள் தாக்கினார்கள். எனினும் கடற்படையின் எதிர்ப்பால் அவை முறியடிக்கப்பட்டன. கப்பல் பாதுகாக்கப்பட்டது. ஒரு தடவை காங்கேசன்துறைத் துறைமுகத்திலிருந்து 5ஆயிரம் சிப்பாய்களை ஏற்றிக்கொண்டு திருகோணமலைத் துறைமுகத்தை நெருங்கியபோது அந்தப் பகுதியில் வைத்துப் புலிகள் அந்தக் கப்பலைத் தாக்கினர். அப்போது கடற்படை மிகவும் சாதுரியமாகச் செயற்பட்டதால் அதிலிருந்த 5ஆயிரம் சிப்பாய்களும் காப்பாற்றப்பட்டார்கள்.

1994, 1995ஆண்டு காலப்பகுதியில் படையினருடன் இணைந்து ஊர்காவற்றுறை, அராலிப் பகுதிகளில் பணியாற்றினேன். அராலிக்கு எதிர்ப்பகத்தில் குருநகர்ப் பகுதி இருந்ததால் புலிகள் அங்கிருந்து முன்னேறி வந்து தாக்குவார்கள். அந்தக் கடற்பரப்பில் புலிகளுடன் நடந்த 6 சண்டைகளில் நான் பங்கெடுத்தேன். அப்போது எனக்குப் பொறுப்பாக ராஜேந்திர ரணசிங்க என்பவர் இருந்தார்.

**கிழக்குக் கடற் சண்டை**

2009 மார்ச் மாதம் வரை கிழக்குக் கடலில் கடற்புலிகளுடன் சண்டையிட்டோம். இறுதிப் போர்க்காலப்பகுதி என்பதால் அட்மிரல் கருணாகொட முல்லைத்தீவுக் கடற் பகுதிக்கு என்னை அனுப்பினார். புலிகளின் தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவிலிருந்து கடல்மார்க்கமமாகத் தப்பிச் செல்வதைத் தடுப்பதே அந்தப் பகுதிக் கடற் பாதுகாப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதற்காக டோறா ரகப் படகுகள், போர்க் கப்பல்களுடன் அந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்தோம். அங்கு 3 மாதங்கள் வரை தொடர்ச்சியாக விடுமுறையின்றிப் பணியாற்றினேன்.

**புலிகளின் தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவிலிருந்து கடல்மார்க்கமமாகத் தப்பிச் செல்வதைத் தடுப்பதே அந்தப் பகுதிக் கடற் பாதுகாப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது**



**சூசையின் மனைவி கைது**

2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி புலிகளின் கடற்படைத் தளபதி சூசையின் மனைவி கடல் மார்க்கமாகத் தப்பியோட முற்பட்டபோது லெப்ரினன் பாலசூரியாவின் அணியினரால் கைது செய்யப்பட்டார் என்று தகவல்கள் கிடைத்தன. இந்தக் கைது இடம் பெறுவதற்கு அரை மணிநேரத்துக்கு முன்னர் சூசையின் குடும்பத்தினர் கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்லவிருக்கின்றனர் கண்காணிப்பைப் பலப்படுத்துமாறு எமக்கும் தகவல் கிடைத்தது.

போர் முடிவுற்றது திருப்தி. எமது சேவையைச் சரியாகச் செய்து முடித்தோம் என்ற மன நிம்மதி உள்ளது. போர் முடிந்த பின்னர் கடற்படைப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றினேன். அப்போது கடல்மார்க்கமாக நடந்த மனிதக் கடத்தல் வியாபாரத்தைத் தடுத்து நிறுத்த முடிந்தது. இது விடயத்தில் நாட்டைவிட்டுச் சட்டவிரோதமாக வெளியேறிய 120 கப்பல்களை நாம் பிடித்தோம். 2014ஆம் ஆண்டு நான் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்.

# தேச வழமையைத் தாண்டிய காணி விற்பனை

கே.என்.சத்தியா



யாழ்ப்பாணத்தில் காணிச் சொந்தக்காரர் ஆனவர் தனது காணியை விற்க முற்பட்டாலோ விரும்பினாலோ அதற்கு முன்னர் அதுபற்றி அந்தக் காணி அயலவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விருப்புடனேயே அந்தக் காணியை மற்றவர்களுக்கு விற்க வேண்டும். அந்தக் காணியை வேற்று இனத்தவர் அல்லது வேறு சாதியினருக்கு விற்க முடியாதவாறு தடுக்கும் நோக்கி லேயே எழுதப்படாத சட்டமாக இந்த நடைமுறை பின் பற்றப்படத் தொடங்கியது. ஆனால், தற்போது நிலமை தலைகீழ். காணி விற்பது பற்றி அயற் காணிக்காரர்களுக் குத் தெரிந்துவிடாதபடி பார்ப்பதில் யாழ்ப்பாணத்தவர்கள் பலரும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். அயலவர்கள் இல்லாத நிலையைப் பலர் வாய்ப்பாகப் பயன்படுத்தி வேறு நபர்களுக்குத் தமது காணிகளை விற்று நழுவியிருக்கிறார்கள்.

காணிச் சொந்தக்காரர் தனது காணியை விற்பனை செய்வதாயின் யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலுள்ள தேச வழமைச் சட்டத்தில் இதற்காகப் பல்வேறு நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் மட்டுப்பாடுகளும் உள்ளன. யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலுள்ள தேச வழமைச் சட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறதா...? கடைப்பிடிக்கப்படுகிறதா...? என்பவை தற்போது எழுந்துள்ள கேள்விகள். ஆனால், யாழ்ப்பாணத் தேச வழமைச் சட்டத்தை எவ்வாறெல்லாம் யாழ்ப்பாணத்தவர்களும், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும், புலம் பெயர்ந்துள்ள யாழ்ப்பாணத்தவர்களும் நூதனமாக மீறிச் செயலாற்றுகிறார்கள் என்பது பலர் அறியாத சங்கதி....!

**வலிகாமம் வடக்கில் பல சம்பவங்கள்**

1990 காலப்பகுதியில் படை நெருக்கடி காரணமாக வலி. வடக்குப் பிரதேசத்திலிருந்து மக்கள் வெளியேறி

யதால் காணி அயலவர்கள் என்ற நிலை அங்கு இல்லாது போயிற்று. கடந்த 40 வருடங்களாக அந்தப் பகுதியினர் குடாநாட்டின் வேறு இடங்களிலும், வெளிநாடுகளிலுமாக வாழும் நிலை ஏற்பட்டது. அயலவர்கள் இல்லாததைப் பயன்படுத்திப் பலர் தமது காணிகளை அவர்களின் அனுமதியின்றிப் பலருக்கு விற்றிருக்கின்றனர். அயலவர்கள் வந்து பார்த்தபோது தமது பழைய அயலவரில்லாமல் புதியவர் ஒருவர் தமது அயற் காணிக்குச் சொந்தம் கொண்டாடுவது கண்டு திகைப்படைந்துள்ளனர். தாம் இல்லாதபோது விற்கப்பட்டுப் பல வருடங்கள் கடந்துவிட்டதால் எதுவும் செய்யமுடியாமல் போய்விடுகின்றனர். இவ்வாறு விற்கும் நோக்கில் தமது காணிகளின் உரிமத்தை வேறு ஒருவருக்குப் சிலரும் தமிழ்ச் சட்டத்தரணிகள் சிலரும் சம்பந்தப்பட்டனர் என்றும் அறிய முடிகிறது.

**மாற்று இனத்தவருக்கு இரகசிய விற்பனை**

2010க்குப் பின்னரான காலப் பகுதியில் வலி. வடக்குப் பகுயிதியில் நிகழவிருக்கின்ற காங்கேசன் துறைத் துறைமுக விரிவாக்கம், பாலாலி வானூர்தி நிலைய விரிவாக்கம், படை முகாம்களின் விரிவாக்கம் ஆகியவற்றைப் புரிந்துகொண்ட காணிச் சொந்தக்காரர்கள் அந்தக் காணிகளில் இனிமேல் தாங்கள் வந்து வாழ முடியாது என்று முடிவுக்கு வந்தனர். அதனால் தமது காணி உறுதிகளை "பவர் ஒவ் அற்றோனி" முறையில் தமக்குத் தெரிந்தவர்களுக்குச் சட்டரீதியாக மாற்றம் செய்து

**தமது காணி உறுதிகளை ''பவர் ஒவ் அற்றோனி'' முறையில் தமக்குத் தெரிந்தவர்களுக்குச் சட்டரீதியாக மாற்றம் செய்து கொடுத்தனர்.**

"பவர் ஒவ் அட்ரோனி" என்று அதை மாற்றம் செய்து அவர் மூலம் அந்தக் காணியைப் பலர் விற்றிருக்கின்றனர்.

இந்தக் காணி உரிமையாளர்களில் பலர் போர் முடிந்த பின்னர் வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்து தமது காணிகளுக்குச் செல்ல முடியாத நிலை காணப்பட்டதால் படையினர் கையகப்படுத்தியிருந்த தமது காணிகளைப் பராமரிப்பதற்காகவும், முடிந்தால் விற்பதற்காகவும் காணி உரிமத்தை இங்குள்ள தமது உறவினர்கள், வேறு நபர்களுக்குக் கொடுத்துச் சென்றார்கள். இதுவிடயத்தில் அந்தப் பகுதி அரசியல்வாதிகள் கொடுத்தனர். இதனால் அந்தக் காணிகளுக்கு யார் அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கே அந்தக் காணிகளை விற்றுவிடும் நிலை ஏற்பட்டது. போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் சாதாரண மக்களுக்கே "பவர் ஒவ் அற்றோனி" என்ற விடயம் பரீட்சயமாகவுள்ளது.

இந்த முன்னெடுப்புக் காரணமாகப் பல காணிகள் பெரும்பான்மை இனத்தவருக்கும், பௌத்த பீடங்களுக்கும், படை மற்றும் காவல்துறை அதிகாரிகள் எனப் பலருக்கும் இரகசியமாக விற்கப்பட்டுள்ளன.

7.5.2023 இல் தனது வீட்டில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அதிக விலை கிடைக்கிறது என்பதற்காக மாற்று இனத்தவர்களுக்குக் காணிகளை விற்கக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் இந்த விடயத்தை முன்னிறுத்தியே குறிப்பிட்டார். இத்தகைய காணி விற்பனைகள் கடந்த 13 வருடங்களாக நடந்தேறிவிட்டன. வெளிநாடுகளிலுள்ள காணிச் சொந்தக்காரர்கள் தமது காணியைச் தமது சொந்தக்காரர்களுக்கு விற்றால் பணம் வாங்க முடியாது அல்லது அதிக விலைக்கு விற்க முடியாது என்பதால் வேறு நபர்களுக்கு இரகசியமாக விற்கவே விரும்புகின்றனர். தற்போது அயலவர்கள் அந்தக் காணிகளில் குடியிருக்காததால் தேச வழமைச் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய விதிகளையும் மிக இலகுவாக மீற அவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதைவிடக் காணித் தரகர்களும் அவர்களுக்குச் சார்பான சட்டத்தரணிகளும் தமது வருமானத்துக்காகக் காணி விற்பனையில் எந்த முறைகேடுகளையும் செய்யத் தயாராக இருப்பதால் மாற்று இனத்தவர் அதிக விலை கொடுத்து காணிகளை வாங்கும் சட்டரீதியான ஓட்டைகள் அதிகமுள்ளன. இதனால் வலி. வடக்கு மட்டுமல்லாது யாழ் நகர்ப்புறக் காணிகளும் அதிகம் வேற்று இனத்தவர்களுக்கு விற்பனையாகிவிட்டன. தென் பகுதி நிறுவனங்கள் பல தமது வர்த்தக நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு எடுத்த கட்டடங்கள் பலவற்றைச் சொந்தமாக்கி விட்டன. அதேவேளை சிங்கள அரசியல்வாதிகள் பலருக்கு யாழ்ப்பாணத்தில் வீடுகள் சொந்தமாக இருக்கின்றன. இனிவரும் காலங்களில் இந்தப் புதிய காணி உரிமையாளர்கள் புத்த கோவில்களையும் வேறு பல விடயங்களையும் தமது சொந்தக் காணியிலேயே செய்வதற்கு வாய்ப்புண்டு. சிங்களவர் எதையும் திட்டமிட்டுத் தூரநோக்குடன் செயற்படுத்தும்போது தமிழர் அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு காணிகளை விற்பதை யாராலும் அவ்வளவு இலகுவாகத் தடுத்து விறுத்திவிட முடியாது. தமிழ்த் தேசியம், மண் பற்று, எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதெல்லம் வேறும் வாய்ப்பேச்சே தவிர நடைமுறையில் இல்லை.



தர்மராசா

# சிறைக்குள்...

## 113

## கண்டி வழக்கைக் கொழும்புக்கு மாற்றியது



8.7.2002 அன்று களுத்துறைச் சிறையில் இருந்து நான்கு கைதிகள் விடுதலை ஆகினர். அவர்களில் ஒருவர் 10 வருடங்களையும் மற்றொருவர் 7 வருடங்களையும் சிறைக்குள் கழித்திருந்தவர்கள். 7 வருடங்களைச் சிறைக்குள் கழித்தவர் எங்கள் வாட்டைச் சேர்ந்தவர். அவருக்கு விதிக்கப்பட்டிருந்த காலவரையறையற்ற தடுப்புக்காவல் உத்தரவை நீக்குவதில் ஏதே சிக்கல் என்று சொல்லி விடுதலை செய்யாமல் மீண்டும் அவரைச் சிறைக்குள் கொண்டுவந்தார்கள். வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்ட ஒருவரைக் கைது செய்யப்பட்ட பகுதியிலுள்ள நீதி மன்றில் ஆரம்பத்தில் முன்னிலைப்படுத்தும்போது கால வரையறையற்ற தடுப்புக் காவல் உத்தரவை அந்த மாவட்ட நீதிபதி வழங்கியிருப்பார். பின்னர் வௌவேறு சிறைகள், நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு அந்தக் கைதிக்கான வழக்குகள் விசாரிக்கப்பட்டு விடுதலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும் ஆரம்பத்தில் போடப்படுகின்ற கால வரையறையற்ற தடுப்புக் காவல் உத்தரவை நீக்காதிருந்தால் அவரைச் சிறை ஊழியர்கள் விடுவிக்க மாட்டார்கள். அதை நீக்கிய பின்னர், அவர் மறுநாள்

விடுதலை ஆகிவிட்டார் அந்த நண்பர் சார்பாக 9.7. 2002 அன்று இரவு பி6 கைதிகள் அனைவருக்கும் காம்பிறாப் பாட்டி ஊடாகத் தேநீர் வழங்கினார்கள்.

10.7.2002அன்று எனது வழக்கில் என் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி சூசைதாசன் களுத்துறைச் சிறைச்சாலைக்கு வந்து என்னையும் அங்கிருந்த அவரது கைதிகளையும் சந்தித்தார். எனது ஒரு வழக்குக் கொழும்பு மேல் நீதிமன்றில் எத்தனையாம் திகதி போடப்பட்டுள்ளது என்று தெரியாது என்றார். நான் உடனே சிறை அலுவலகத்தின் பதிவுப் பகுதிக்குச் சென்று அதுபற்றி விசாரித்தேன். 4.9.2002 இல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு என்று தவணையிடப்பட்டிருந்தது. இது ஒரு 05 (1) பி வழக்காக இருந்தபோதிலும் அது எனது விடுதலைக்கு ஒரு முள்ளாக இருந்தது. மற்றைய வழக்கு ஒன்று 22.7.2002 இல் கொழும்பு 2 ஆவது மேல் நீதிமன்றில் விசாரைணைக்கு வந்தது. 9 மாதத்துக்கு விசாரணைக்கு வருகிற வழக்கையும் 7ஆம் மாத வழக்குகன்று மனுப்பண்ணி எடுப்பதாகச் சட்டத்தரணி சூசைதாசன் கூறினார். என்மீது திருகோணமலை மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட ஒரு வழக்குக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் அதை வைத்து ஏனைய வழக்குகளை திரும்பப்பெறுவது மாத்திரமே எஞ்சியிருந்தது.

10.7.2002 அன்று இரவு அப்பன் என்பவரும் குட்டி என்பவரும் டொமினோஸ் விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கிடையில் கடும் போட்டி ஏற்பட்டது. அதில் தோற்பவர் ஒன்றரை லீற்றர் தண்ணீர் குடிப்பதாக இருவரும் ஏற்றுக்கொண்டு போட்டி போட்டு விளையாடினார்கள். நானும் பொலநறுவையைச் சேர்ந்த சின்னவன் என்பவரும் மத்தியஸ்தர்களாக இருந்தோம். இறுதியில் அப்பன் தோற்றுவிட்டார். ஒன்றரை லீற்றர் தண்ணீரை அவரே குடிக்கவேண்டிதாயிற்று. மறுநாளே குட்டி விடுதலையாகிவிட்டார். குட்டி சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர். இத்தகைய சம்பவங்கள் சிறையில் மறக்க முடியாதவை.

அந்த மாதம் 17ஆம் திகதியுடன் மருத்துவர் ஜெயலத் ஜெயவத்தன வழங்கிய 3 மாதத் தவணை முடிவடைவதால் மீண்டும் உணவு தவிரப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டை 11.7.2002இல் பல கைதிகள் மேற்கொள்ளத் தொடங்கினர்.

17.7.2002 அன்று மரினோ என்ற கைதி கழிப்பறைப் பக்கமாக இருக்கும் மின் வெளிச்சத்தில் சீலைத் திரைக்குப் பின்னால் பெரிய கறுத்த உருவம் ஒன்றைக் கண்டதாகவும் அந்த நேரத்தில் சகிக்க முடியாத துர்நாற்றம் வந்தது என்றும் சொன்னார். அந்த நேரத்தில் தன்னால் கத்தக்கூட முடியவில்லை என்றும் அந்த உருவம் மறைந்த பின் பின்புறமாகவுள்ள யன்னல் கம்பிகளைக் கடிப்பதுபோல சத்தம் கேட்டது என்றும் கூறினார்.

சிறையில் அவ்வாறு துர்நாற்றம் வந்ததால் பின்னர் இலையான்கள் கலைந்துபோவதுபோல சத்தம் கேட்கும் என்றும் அந்தச் சத்தம் கடந்தபின் துர்நாற்றமும் இல்லாது போகும் என்றும் லிங்கம் என்ற மற்றொரு கைதி தனது வேறொரு சிறை அனுபவத்தைக் கூறினார். இவையெல்லாம் எந்தளவுக்கு உண்மையென்று என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை. இவற்றுக்குரிய விஞ்ஞான விளக்கங்கள் எவையென்றும் தெரியவில்லை.

(தொடரும்)

---

# சவம்

## இந்த வாரச் சொல்

சவம் என்கிற சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பெயர்ச் சொல்லாகப் பயன்பாட்டிலுள்ளது. இதன் நேரடி அர்த்தமாகப் பிணம், சடலம், உடலம், பிரேதம் ஆகியன இருந்தாலும் வேறு அர்த்தங்களுடன் பயன்படுத்தப்படுகிறது.

"எப்ப சவம் எடுக்கினமாம்" என்பதில் சடலம், பிணம் ஆகிய அர்த்தம் பெறுகிறது.

"இந்தச் சுருட்டுச் சவம் ஒழுங்காப் பத்துதில்ல"
"கதிர் நனைந்ததால் சவம் நெல்லுக் கொட்டுதில்ல"
"உந்தச் சவத்தையே பிறகும் வாங்கிக் கொண்டு வாறாய்"
இங்கு சவம் என்பது தரம் குறைந்த பொருளைக் குறிக்கிறது.

"அந்த மா இல்லாததால் இந்தச் சவத்தைத் தான் இப்ப குடிக்கவேண்டியிருக்கு"
"உந்தச் சவ பஸ்ஸையே இண்டைக்கு விட்டிருக்கிறாங்கள்...?"
இதில் சவம் என்பது அடிக்கடி பழுதுபட்டு இடையில் நிற்கிற பஸ் என்ற அர்த்தத்தில் பயன்பாட்டிலுள்ளது.

"உந்தச் சவத்தைத் திண்டுதான் மனிசருக்கு வருத்தம்"
"விறகு நனைஞ்சதால அடுப்புச் சவம் எரியுதில்ல" என்பவையும் சவம் என்பதன் வெவ்வேறு அர்த்தங்களுக்கு உதாரணங்கள் ஆகும்.

# மீண்டும் சந்திப்போம் நாம் மீண்டும் சந்திப்போம்...!

**துசாந்த்**

"மீண்டும் சந்திப்போம்... நாம் மீண்டும் சந்திப்போம்... நாம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டால் மீண்டும் சந்திப்போம்..." என்பது தமிழ்ச் சினிமாப் படத்தில் இடம் பெறும் பாடல் வரி ஒன்று. இந்தப் பாடல் இன்றைய அரசதலைவர் ரணில்விக்கிரமசிங்க - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சு விடயத்துடன் மிகவும் பொருந்திப் போவதாக இருக்கிறது. இந்த இரண்டு தரப்பினரும் எப்போது இணைவார்கள்...? எப்போது பிரிவார்கள்...? என்று மக்கள் அடிக்கடி அங்கலாய்க்கும் நிலையே இருக்கிறது. தமிழ்க்கட்சிகள் தமக்குள் ஒற்றுமை இல்லாமல் இந்து ஆலயங்களில் நவக்கிரகங்கள் நிறுவப்பட்டிருப்பதைப்போல எதிர் எதிர் திசைகளில் தமது முகங்களை வைத்துக்கொண்டு அரசதலைவரைச் சந்திப்பதால் எதுவும் நடக்கப்போவதில்லை. அதையே காலமும் செயல்களும் உணர்த்தி வருகின்றன.



### வடக்குக் கிழக்கு இழுபறி

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணசபைத் தேர்தல் நடந்தால்கூட அது வடக்கு அரசியலுக்கு பாதகமாகவே அமையும் என்கிற நிலையே இப்போது காணப்படுகிறது. ஆனால், அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழ்த் தலைவர்கள் இறுதியாகச் சந்தித்தபோது வடக்குக் கிழக்கில் எதிர்கால நிர்வாகப் பகிர்வு பற்றிய பேச்சு ஆரம்பிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமக்குள் நடத்திய கூட்டம் ஒன்றில் மாவை சேனாதிராசாவின் கருத்தை எதிர்த்துக் கதைத்த இரா. சம்பந்தன் வடக்குத் தலைவர்கள் கிழக்குத் தலைவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று விசனத்துடன் குறிப்பிட்டார் என்றும் சொல்கிறார்கள். சம்பந்தனின் கருத்து இவ்வாறு இருக்கும்போது வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைத்துத் தேர்தல் நடத்தினால், ஒரு முதலமைச்சர், 4அமைச்சர்கள் என்று அது மட்டுப்படுத்தப்படுவதை வடக்குத் தலைவர்கள் விரும்பமாட்டார்கள். கிழக்குத் தலைவர்களும் அதை விரும்பப் போவதில்லை. உள்ளூரில் கோவில் தலைவராக இருப்பவரோ கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருப்பவரோ தமது பதவிகளைத் துறக்கத் தயாராக இருக்காத நிலையில் சம்பந்தன் போன்ற வயோதிபர்கள் சாகும் வரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என ஆசைப்படுவதைத் தவிர்க்க முடியாது. இதனால்தான் தமது கட்சிக்குள்ளேயே இன்னொருவரை நியமித்துக் கட்சியை வளர்க்கவோ மக்கள் விடயத்தில் நடவடிக்கை எடுக்கவோ விரும்புவதில்லை. இத்தகைய போக்கு அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களுக்கு மிகவும் வாய்ப்பானது. அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த குகதாசன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்று தெரிகிறது.

### ஒப்பங்கோடல்

வடக்கையும் கிழக்கையும் இணைக்கவேண்டுமா? இல்லையா? என்று வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் மத்தியில் ஓர் ஒப்பங்கோடலை நடத்தினால் நிச்சயமாகக் கிழக்கு மாகாணத் தமிழர் வடக்கு மாகாணத்துடன் இணைய விரும்ப மாட்டார்கள். கிழக்கில் தமிழ் மக்களின் தொகையைவிட முஸ்லிம்களின் தொகை அதிகம். அவர்களும் இணைவை விரும்புபவர்களில்லை. இந்த நிலையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தலை

விரைவு உலகமென்பதில் இன்றைய எமது வாழ்க்கை முடிவும் விரைவாகிவிட்டது என்பதைக் கண்டுகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ எமக்கிருக்கும் பகுத்தறிவு போதாது என்பதை ஏற்றுக்கொண்டு தீர்வை நோக்கி நகரத் தயாராக எம்மில் பலர் தயாராக இல்லை என்பதே யதார்த்தமானது. தீர்வை நோக்கிய வாழ்க்கையைத் தீர்மானிப்பதற்கான யதார்த்த அறிவு இருக்கிறதா?

எமது ஆரோக்கியக்கேட்டிற்கு எமது உணவுப் பழக்கவழக்க மாற்றம் மட்டுந்தான் காரணமா? இல்லை. காரணங்கள் நீளமாகப் பட்டியலிடக்கூடியளவில்தான் உள்ளன. உடலுக்கான இயங்குநிலை என்பது முக்கியமானது. உடலுழைப்பு என்பது இன்று இயந்திர சாதனங்களால் பெருமளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது. மூளையுளைப்பு என்பதுகூட இன்று மிகவும் சுருங்கிவிட்டது. எங்கோ ஒருவனது மூளையுழைப்பின் பெறுதிகள்வழி எமது இயக்கத்தைத் தொடரக்கூடியதான அறிவியல் எமக்குக் கிட்டியுள்ளது.

உடலுழைப்பு என்பதானது எமது உடலினது உறுப்புகளது பெருமளவு பங்கேற்புடனான செயற்பாடெனக் கொள்ளமுடியும். அன்று



எம்முன்னோர் தமது உயிர் வாழ்தலுக்காக உடலையே கருவியாகக்கொண்டு செயற்பட வேண்டியவர்களாக இருந்தனர். உயிர் வாழ்தலுக்கான அடிப்படையான உணவுத் தேடலில் ஒரு செயற்பாட்டொழுங்கு இருந்தது. பயிரிடல் என்பது தொடக்கம் வேட்டை என்கிறவரை உடலை ஒரு மூலகருவியாகக்கொண்டு இயங்கினார்கள். இச்செயலொழுங்கு பற்றி அதிகம் பேசவேண்டியதில்லை.

இன்றைய எமது உணவிற்கான தேடல் அல்லது உழைப்பு என்பது இருந்த இடத்திலேயே (உள்ளங்கைக்குள்ளேயே) சாத்தியமாகிவிட்டுள்ளது. அது இணையதேடுதலுடன் கட்டளையை வழங்குவதுடன் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. அல்லது தொலைபேசி வழியான உரையாடலூடாக முடிவுறுத்தக்கூடியதாக உள்ளது. இவ்வாறாக நாம் பெற்றுக்கொள்கிற உணவு அல்லது உணவுக்கான மூலப்பொருட்கள் யாவுமே

# தீர்வு...

15

துன்பானந்த சுவாமி

நடத்தினால் அதில் பலம் பெறப்போவது முஸ்லிம் கட்சிகளும், சிங்களக் கட்சிகளும், அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ்க் கட்சிகளுமே. தமிழ்த் தேசியம் பேசும் கட்சித் தலைவர்களிடம் காணப்படும் முரண்பாடுகளும் ஆளுமையற்ற தன்மையும் இலகுவில் விலைபோகக்கூடிய நிலையும் வடக்கும் கிழக்கும் இணைந்த தேர்தலில் அவர்களைப் பாரிய பின்னடைவைச் சந்திக்கச் செய்யும்.

அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப்பேசவிருந்த நிலையில் அதைத் தமிழ்த்தேசியக் கட்சிகள் குழப்பியதால் நிலைமை பொதுவெளிக்கு வந்துவிட்டது. இதில் முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடும் வேறொரு பரிமாணத்தை எட்டியிருக்கிறது. முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, முஸ்லிம்களுக்குச் சவூதி அரேபியாவின் பின்னணி இருப்பதால் தமக்கான அபிவிருத்தியைச் சவூதி அரசினுடாக மேற்கொள்ள முடியும் என்று குறிப்பிட்டிருந்தார். அரசினுடனான தற்போதைய பேச்சுக்களை வடக்குக்குத் தனியாகவும் கிழக்குக்குத் தனியாகவும் நடத்தினால் தமிழரின் தாயகக் கோட்பாடு அடிபட்டுப்போய்விடும் என்ற பயமும் மக்களுக்குத் தாம் இதுவரை கூறிவந்த தீர்வுத் திட்டம் என்ற விடயம் கேள்விக்குறியாகிவிடும் என்ற பயமும் இனிவரும் தேர்தல்களில மக்கள் தம்மை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள் என்பதும் தமிழ்த் தேசியத் தலைவர்களுக்கு இருக்கும் பயமாகும்.

இத்தகைய இழுபறிக்குள் தமிழத் தலைவர்களுடனான பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது அரசதலைவர் ரணில்விக்கிரமசிங்கவுக்குப் பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. இந்தக் கூட்டத்துக்கு வருமாறு நான் யாரையும் கட்டாயப்படுத்தி அழைக்கவில்லை என்று இந்தக் கூட்டத்தொடரின் முதலாவது கூட்டத்தில் அரசதலைவர் குறிப்பிட்டிருந்தார் என்று அறியமுடிகிறது. அந்த வகையில் தீர்வு எதுவுமின்றியே ஒவ்வொரு கூட்டத்தொடரும் நடந்து முடிந்துள்ளன. தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில் மீண்டும் சந்திப்போம் நாம் மீண்டும் சந்திப்போம் என்றவாறே இந்தப் பேச்சுகள் அமைந்துகொண்டிருக்கின்றன.

(முன்னர் பல தடவைகளாகப் பேசியதுபோல) அவசர உற்பத்திகளாகவே உள்ளன. அவசர உற்பத்திகள் இயந்திர சாதனங்களது துணையுடனும் இரசாயனங்களது பெருத்த பயன்பாட்டுடனும் அறிவியலினால் குறுக்கப்பட்ட காலப்பெறுதியுள் பெறத்தக்கதாக உள்ளன. ஆகமொத்தத்தில் உணவுக்கான உழைப்பை வழங்கத் தேவையேதுமற்ற ஒரு உயிர்த் தொகுதியாக மாறிவிட்டிருக்கிறோம். அல்லது மாற்றப்பட்டுவிட்டோம். உற்பத்தி என்கிற உழைப்புச் செயன்முறைக்குப் பதிலாக அவசர நுகர்வுச் செயன்முறைக்கு மாறிவிட்டோம். அவசர நுகர்வு என்பதை உலகத்தினது விரைவுக்கேற்ப ஒத்தோடல் என்பதாக அத்தியாவசியம் என்பதற்கப்பால் ஆடம்பரம் நோக்கியதாக வந்திருக்கிறோம். இந்த ஆடம்பரம் என்பதனுள் வீட்டுள் இருந்தவாறே கட்டளையிட்டு பெறுவதும் ஒன்று. ஆக பொருட்கொள்வனவு என்பதற்கான உழைப்புகூட தவிர்க்கப்பட்டுவிட்டது. இப்படியாக உணவுக்கான உழைப்பு முடங்கிவிட்டதை ஒரு எடுத்துக்காட்டுக்காக இவ்விடத்தில் பேசினேன். இப்படியாக நாம் நுகர்கிற உணவினது தரம் பற்றி நிறைய ஏற்கனவே பேசிவிட்டோம்.

இடத்துக்கிடமான நகர்வென்பது பெருமளவு ஒடுங்கிவிட்டது. முன்னர் பேசியதுபோல தேவைகளை இருந்த இடத்திலேயே நிறைவேற்றிக் கொள்ளும் வசதிகளை தொழல்நுட்பம் தந்திருக்கிறது. அப்படி நகர்வுக்கான அவசியம் ஏற்படுகிறபோதுகூட நடைரூபவ் ஓட்டம் அல்லது மிதிவண்டியோட்டம் என எதையும் இப்போது செய்கிற அவசியத்தை தொழில்நுட்பம் தவிர்த்துவிட்டது. எமது உடலுக்கான உழைப்பை இயந்திரங்கள் நிறைவு செய்துகொண்டிருக்கின்றன. இயந்திரங்கள் இல்லையென்றான ஒரு

நாட்பொழுதை கற்பனை செய்வதுகூட முடியாத ஒன்றென ஆகிவிட்டது. இந்தளவிற்கு இயந்திரங்கள் எம்மை ஆக்கிரமித்துவிட்டன என்பதை நாம் உணர்ந்துகொண்டாலும் அவற்றின் பிடியிலிருந்து விடுபடுவதைப்பற்றி எண்ணவே முடியாதுள்ளதல்லவா? எமக்கான உடலினது இயக்கம் இவ்வாறாக முடங்கியிருப்பதனது விளைவுகள் எமக்குச் சாதகமானதா? இல்லைப் பாதகமானதா? இதுபற்றி விவாதங்களை நீளமாகவும் விரிவாகவும் மேற்கொள்ளமுடியும். ஆனால் அவ்வாறேதாவது செய்திருக்கிறோமா? ஆங்காங்கே ஒரு சடங்குபோல சிலவேளைகளில் மேலோட்டமாக இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இயந்திரங்கள் எமது வாழ்க்கையை இலகுபடுத்துகிறது என்பதாகவே முடிவுகள் எட்டப்படும். இல்லையா? அவசர உலகமென நாமே தீர்மானமெடுத்து இயங்குகிற ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சட்டகத்துக்குள்ளாக உள்ள ஒரு செயல்வெளியை இட்டுநிரப்ப இயந்திரங்கள் இல்லையென்றால் வாழ்க்கையே இல்லை என்று கூடியபழகிற ஒரு கூட்டமாக மாறியிருக்கிறோம். இயந்திரங்களது விளைவுகள் எப்படியானவை? பேச நிறையவே உள்ளன. பேசுவோம்.

# வேலியளிலை பொட்டுகளும் இருக்காம்?



**கதிரேசன் காத்தவராயன்**

கனகாலமாய் மாஸ்ரர் வீட்டுப்பக்கம் போகயில்லை எண்டது நினைப்புக்குவர வெளிக்கிட்டன். பாதையிலை முருகேசரும் சேந்துகொண்டார். மாஸ்ரர் வீட்டிலை கனகரோடை கதைச்சுக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டிட்டு 'என்னப்பா ஜனாதிபதியைச் சந்திக்கிறது சுவம்போலை?' எண்டுகொண்டு வரவேற்றார். போயிருந்துகொண்டம்.

'என்ன மாஸ்ரர் இந்த வெய்யிலைப் பாத்தால் நெருப்புப் பிடிச்சிடுமோ எண்டல்லே பயமாக்கிடக்குது' எண்டார் வேர்வையை ஊதினபடி முருகேசர். 'பருவந்தப்பியல்லே எல்லாம் நடக்குது...ஏதாலும் ஒண்டெண்டாலும் சரியானபடி நடக்குதோ?' எண்டார் கனகர். அந்தநேரமாப் பாத்து சுதனின்ரை கூட்டாளியள் நாலைஞ்சு பேர்- வழக்கமாய் வாறபெடியள்தான் வந்தாங்கள். நல்ல அறிமுகம் இருந்ததாலை சிரிச்சு 'என்ன சூடெண்ட கதை காதிலை விழுந்துது?' எண்டு சிரிச்சபடி தொடங்கினான் ஒருத்தன்.

'தம்பியவை நாடே சூடாயல்லே கிடக்குது? எனி பேப்பருகளிலையும் உங்கடை பக்கத்துச் சூடான கதையளும் வருகுது?' எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க சுதனும் உள்ளுக்கையிருந்து வந்து சேந்துகொண்டான். 'சூடான கதையளோ? அப்பிடி என்ன?' எண்டு சுதன் ஒரு சிரிப்போடை கேட்டான். 'என்னடாப்பா சுதன் அப்பிடியொண்டும் இல்லையெண்ணப் போறியோ' எண்டு முருகேசர் சுதனைக்கிண்டினார்.



# ஆதிபுருஷ்

## சொதப்பலோ சொதப்பல் படு சொதப்பல்

'ராமாயணம்' என்ற சிறப்புமிக்க இதிகாசத்தின் ஒரு பகுதியை அடிப்படையாகக் கொண்டு புதிய கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெரும் எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட திரைப்படாம்தான் 'ஆதிபுருஷ்'. இதை இயக்கியிருக்கிறார் ஓம் ராவத்.

**கதை**

தன் மனைவி சீதை (கிருத்தி சனோன்), தம்பி லட்சுமணனுடன் (சன்னி சிங்) 14 ஆண்டுகள் வனவாசம் செல்கிறார் ராமர் (பிரபாஸ்). தங்கை சூர்ப்பனகையின் காதலை ஏற்க மறுத்து அவளது மூக்கை அறுத்த ராமனைப் பழிவாங்கும் பொருட்டு, முனிவராக மாறுவேடம் பூண்டு சீதையைக் கடத்திச் சென்று விடுகிறார் இலங்கை அரசனான ராவணன் (சைஃப் அலி கான்). சுக்கிரீவனின் வானரப் படை மற்றும் அனுமனின் (தேவ் தத்தா நாகே) உதவியுடன் இலங்கைக்குச் செல்லும் ராமர், சீதையை எப்படி மீட்டார் என்பதே 'ஆதிபுருஷ்' படத்தின் கதை.

ராமாயணம் குறித்து வாய்வழிக் கதைகள், புத்தகங்கள், தொடர்கள், திரைப்படங்கள் என ஏதோ ஒருவகையில் சிறுவயது முதல் இந்தக் கதை பரிச்சயமாகியிருக்கும். அப்படி சிறப்பு மிகுந்த ஒரு கதைக்களத்தை கையில் எடுத்துக் கொண்ட இயக்குநர் அதே சிறப்புடன் அதனை திரையில் காட்சிப்படுத்தியுள்ளாரா என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

முதல் டீசரிலேயே 'ஆதிபுருஷ்' அளவுக்கு வேறு எந்த திரைப்படமும் சமூக வலைதளங்களில் கிண்டலடிக்கப்பட்டிருக்குமா என்



'இப்ப கனக்கச் சூடான விசயங்களல்லே கிடக்கு எதையெண்டுதான் சொல்லுறது... நீங்கள் எதைக்கேக்கிறியள்?' எண்டான் சுதன் ஒரு சிரிப்போடை. 'ரியூட்டறிக் கட்டுப்பாடுகள் ரூபவ் இடமாத்தங்கள்...அதோடை காவாலித் தனங்கள்...' எண்டு நான் தொடங்க 'கதிரேசர் வில்லண்டமானதுகளைத்தான் தொடங்கிறீர் என்ன?' எண்டு மாஸ்ரர் உற்சாகப்படுத்தினார். 'இஞ்சார் ஒண்டு சொல்லட்டே உதுகளை யெல்லாம் கட்டுப்படுத்தேலாதோ? இல்லாட்டில் சும்மா இருந்தாச் சோறாமோ.. சித்தா வாடா காலாட்டுவம் எண்டுற மாதிரியான வேலையள் தானோ?' எண்டு எரிச்சலோடை முருகேசர் சொல்ல பெடியளிலை ஒருத்தனும் நானும் ஆமோதிச்சம். மாஸ்ரர் தலையாட்டினார்.

'ஒராளுக்கெண்டாலும் உருப்படியாய் ஒரு நடவடிக்கை எடுத்தால் மற்றவை தானாய்க் கட்டுப்படுவினம்.

இடமாற்றமும்தான்...ஒழுக்கமும்தான்...' எண்டு ஆமோதிச்ச பெடியன் சொல்ல 'அப்பிடி நடந்தால் நாங்கள் தலை குனியத் தேவையில் லையல்லே? இப்ப வாத்திமாரெண்டு சொல்ல வெக்கமாயல்லே கிடக்குது?' எண்டான் இன்னொராள். 'ஆரை ஆர் விசாரிக்கிறது? ஆருக்கு ஆர் தண்டனை குடுக்கிறது? பயமில்லாத ஒரு கூட்டமாயல்லே இருக்கிறம்...அனேகமான ஆக்கள் எல்லாருக்கும் முதுகிலை புண்... சுண்ணாம்புமூட்டையை வேண்டாம் பஞ்சு மூட்டை கூட தூக்கேலாத கட்டமல்லே?' எண்டான் சுதன் கோவத்தோடை. 'சுதன்.. சரியாச் சொன்னாய்...' எண்டான் ஒருத்தன் உற்சாகமாய்.

'ஒரு இடத்திலை ருசிகண்டு தப்பினவன் சும்மா இருப்பானோ? ஆவனை ஏன் இடம்மாத்துவான்? உனக்கிந்தத் தொழில் சரிவராது வீட்டை போயிரெண்டு அனுப்புற துணிச்சல் பெரியாக்களுக்கு இல்லை. அப்ப எப்பிடி நிலைமை சரியாயிருக்கும்? எண்டான் இன்னொருத்தன். 'சுதன் சொன்ன முதுகுப் புண் தட்டுப் பட்டுப் போகுடுமெண்டிற பயம் பிழையான ஆக்களுக்கு துணிவைக் குடுக்குது..' எண்டார் கனகர்.

'உந்த வெளிமாவட்ட இடமாத்தம் அதுஒரு பேய்க்காட்டு... ஏழு வரிசம் மன்னாரிலை இருந்தவனின்ரை பேர் பட்டியலிலை கிடக்காம்... ஆனால் ஊரை விட்டு விலத்தாத கனக்கப் பேரின்ரை பேர் பட்டியலிலையே இல்லையாம்...' எண்டொருத்தன் சொல்லிக்கொண்டிருக்க 'ஏன் தம்பியவை உங்கடை தொழிற்சங்கக்காறர் என்ன செய்யினம்?' எண்டன். 'அவை தங்கடை பெண்டில்மாரை வீட்டுக்குப் பக்கத்திலை நிப்பாட்டுறதிலையல்லோ நிக்கினம்?' எண்டான் ஒருத்தன் கொதிப்போடை.


'ம்ம்...பெரியவையும் தங்கடையாக்களுக்கு சலுகை...அந்த ஓட்டையைப் பாவிச்சு வாயாடி கையாடியள் தப்ப அப்பாவியள்தான் மாட்டுப் படுகிதுகள்..' எண்டார் மாஸ்ரர் எரிச்சலும் இயலாமையுமாய். 'மாஸ்ரர் வேலியிலை பொட்டுகள் இல்லாமலிருக்குமோ? அப்பிடித்தான்...கண் மறைப்புக்குத்தான்..' எண்டுகொண்டு எழும்ப கனகரும் எழும்பினார் வீட்டை வந்திட்டன்.



பதும் சந்தேகமே. அந்த அளவுக்கு மோசமான கிராபிக்ஸ்...!

அதன்பிறகு உஷாரான படக் குழு கூடுதலாக ரூ.100 கோடி செலவு செய்து கிராபிக்ஸ் தரத்தை மேம்படுத்தியதாகக் கூறப்பட்டது. ஆனால் படத்தின் அனிமேஷனில் எந்தவொரு முன்னேற்றமும் தெரிய வில்லை. ஏறக்குறைய ரூ.500 கோடி ஒதுக்கீட்டில் மோஷன் கேப் சர் தொழில்நுட்பத்தில் உருவாகி யிருக்கும் படத்தின் அனிமேஷன் ஹிந்தி தொடர் நாடகங்களில் வரும் கிராபிக்ஸுக்கு ஒப்பாக இருக்கிறது.

கோடிகளைக் கொட்டி எடுக் கப்படும் இந்தியப் படங்க ளால் ஏன் இன்னும் ஒரு சாதாரண ஹொலிவூட் அனிமேஷன் படத்தில் இருக்கும் தரத்தை கூட எட்டமுடியவில்லை என் பது மட்டும் புரியாத புதி ராகவே இருக்கிறது. குறிப் பாக படத்தின் அறிமுகக் காட்சியில் வரும் சண்டை, சுக்கிரீவன் - வாலி இடையி லான சண்டை, ராவணன் ஒரு ராட்சத வௌவாலில் அமர்ந்து வரும் காட்சி, ராமர் பாலம் உருவாகும் காட்சி, சஞ்சீவி மலையை அனுமன் தூக்கி வரு வது உள்ளிட்ட பிரம் மாண்டமாக வந்தி ருக்க வேண்டிய காட்சிகள் அனைத்திலும் கிராபிக்ஸ் பல்லிளிக்கிறது. படம் முப்பரிமாணத்தில் வெளியாகியி ருப்பதால் மட்டுமே வீடியோ கேம் போன்ற கிராபிக்ஸ் காட்சிகளை ஓரளவு சகிக்க முடிகிறது. ஹொலிவூட்டில் வெளியான 'ரைஸ் ஆஃப் தி ப்ளானட் ஆஃப் தி ஆப்ஸ்' படத்திலிருந்து அப்பட்டமாக சில காட்சிகளை உருவி அப்படியே படத்தில் வைத்திருக்கிறார்கள்.




**பாத்திரங்கள்**

ராமராக பிரபாஸ். அவரது கடா மீசையும், முரட்டுத்தனமான தோற்ற மும் சுத்தமாக இந்த கதாபாத்திரத் துக்கு ஒட்டவில்லை. திரையில் இதுவரை நாம் பார்த்துப் பழகிய ராமர் மிகவும் சாந்தமானவராகவும், மீசை இல்லாதவராகவும் இருந்தது கூட ஒரு காரணமாக இருக்கலாம். அவரது நடிப்பும் சொல்லிக் கொள்ளும்படி இல்லை. படம் முழுக்க முகத்தில் எந்த வொரு உணர்ச்சியை யும் காட்டாமல் வந்து செல்கிறார். எமோ ஷனல் காட்சிகள், ஆக்ஷன் காட்சிகள் என எல்லாவற்றிலும் ஒரே போன்ற நடிப்பு. ராவணனாக சைஃப் அலி கான். தான் ஒரு அசுரன் என்பதை நிறுவ காலை அகட்டி அகட்டி நடப்பதும், கரகர குரலில் பேசுவதும் ஆரம்பத்தில் ஓரளவு ரசிக்க வைத்தாலும் படம் முழுக்க அதையே செய்து கொண்டிருப்பது எரிச்சலை தருகிறது. சீதையாக நடித்திருக்கும் கீர்த்தி சனோன் மட்டுமே குறை சொல்லமுடியாத நடிப்பை வழங்கி ஸ்கோர் செய்கிறார்.

ஏற்கெனவே அனைவருக்கும் தெரிந்த கதைதான் என்றாலும் அதை திரைக்கதையாக எழுதும் போது பார்வையாளர்களை மூன்று மணி நேரம் கட்டிப் போடும் வகையில் ஜாலம் செய்திருக்க வேண்டாமா? எந்தவொரு தொழில்நுட்பமும் இல்லாத காலத்தில் வெளியான 'திரு விளையாடல்', 'கந்தன் கருணை', 'கர்ணன்', தமிழிலும் தெலுங்கில் வெளியாகிப் பலராலும் பார்க் கப்பட்ட 'சம்பூர்ண ராமாய ணம்' போன்ற திரைப்படங் களை இப்போதும் உட்கார்ந்து பார்க்கமுடிகிறதே? படத்தின் தொடக்கத்தில் வரும்





சண்டைக் காட்சியே படுசலிப்பை ஏற்படுத்துகிறது. அதன் பிறகு ராவணனுக்கு ஒரு பாடல், அதன் பிறகு ராமர் - சீதைக்கு ஒரு பாடல் என முதல் அரை மணி நேரத்திலேயே மூன்று பாடல்கள். கதை ஒரு போரை நோக்கித்தான் நகர்கிறதென்றால் என்ன செய்திருக்க வேண்டும்? பார்ப்பவர்களை எப்போது ராமனும் ராவணனும் மோதிக் கொள்வார்கள்? போர்க் காட்சிகள் எப்போதும் வரும் என்று பதைபதைக்கச் செய்திருக்க வேண்டும். ஆனால் சுவாரஸ்யம் கிஞ்சித்தும் இல்லாத தொய்வான காட்சியமைப்புகளால் பார்ப்பவர்கள் மத்தியில் ஒரு சின்ன சலனம் கூட ஏற்படவில்லை. இப்படத்தை 10 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்து, 100 எபிசோட்களாக பிரித்து ஹிந்தியில் நாடகமக்போல வெளியிட்டிருந்தால் ஒருவேளை கவர்ந்திருக்கலாம்.

படத்தில் உள்ள படு அபத்தமான மற்றொரு அம்சம், ஆடை அலங்காரம். எந்த நிலப்பரப்பில் எந்த காலகட்டத்தில் எப்படியான ஆடைகளை அணிந்திருப்பார்கள் என்ற ஒரு சின்ன ஆய்வு கூட செய்யத் தோன்றவில்லை? ராவணனும், அவரது அரசவையில் இருப்பவர்களும் பழங்கால கிரேக்க மன்னர்களைப் போன்ற உடைகளை படம் முழுக்க அணிந்து வருகிறார்கள். அதிலும் ஸ்டெப் கட்டிங், தாடி ட்ரிம்மிங் செய்த ராவணனை இதுவரை எந்த வடிவத்திலும் நாம் பார்த்திருக்க முடியாது.

படத்தின் ஒரே மிகப்பெரிய ஆறுதல் இசை. சஞ்சித் பல்ஹாரா மற்றும் அங்கித் பல்ஹாராவின் பின்னணி இசை படத்தை பல இடங்களில் தூக்கி நிறுத்த முயல்கிறது. அஜய்-அதுல், சாசெட்-பரம்பராவின் இசையில் 'ராம சீதா ராம்' பாடலும் 'ஞாழல் மலரே' பாடலும் மனதை வருடுகின்றன. படம் முழுக்க வரும் 'ஜெய்ஸ்ரீராம்' என்ற தீம் இசை சிறப்பு.

ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இதிகாசத்தை திரைப் படமாக்க வேண்டும் என்ற முனைப்பு இருந்தால் மட்டும் போதாது. அதனை திரையில் கொண்டு வரும்போது திரைக்கதையில் கொஞ்சமேனும் கவனம் எடுக்க வேண்டும். அது 'ஆதிபுருஷ்' படத்தில் துளியும் இல்லை.

# போர் தொழில்

## விறு விறுப்புக்குப் பஞ்சமில்லை

முறையான குழந்தை வளர்ப்புக்கான தேவையையும், திருமண உறவுச் சிக்கல்களில் எழும் முரண்களைக் களைய வேண்டியதற்கான அவசியத்தையும் முன்வைத்து ஓர் அழுத்தமான கதையை எழுதியிருக்கிறார் இயக்குநர் விக்னேஷ் ராஜா. அவரது இயக்கத்தில் அண்மையில் வெளியாகிய படம்தான் போர் தொழில்.

**கதை**

இந்தியாவின் திருச்சிப் பகுதியில் பெண்களைக் குறிவைத்து ஒரே ரகத்தில் தொடர் கொலைகள் நடக்கின்றன. எந்தவித தடயமும் கிடைக்காததால் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளூர் காவல் துறையினர் திணறுகின்றனர். இதனால், இந்த வழக்கு 'க்ரைம் பிரான்ஞ்ச்'' எஸ்.பி.லோகநாதனிடம் (சரத்குமார்) ஒப்படைக்கப்படுகிறது. அவரிடம் புதிதாக டி.எஸ்.பி.யாக பணி நியமனம் பெற்ற பிரகாஷ் (அசோக் செல்வன்) பயிற்சிக்காக இணைகிறார். கொலைகாரனைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இருவரும் விசாரணையைத் தொடங்குகின்றனர். இந்தக் கொடூரக் கொலைகளை அரங்கேற்றும் கொலையாளி யார்? எதற்காக அவர் இப்படியான கொலைகளைச் செய்கிறார்? அதன் பின்புலம் என்ன? - இதையெல்லாம் எதிர்பாராத விறுவிறுப்புப் பாணியில் சொல்லியிருக்கும் படம்தான் 'போர் தொழில்'.

**பலம் - பலவீனம்**

இயக்குநர் வெறும் புதுவித விறு விறுப்புக் களத்துடன் சுருங்காமல் குற்றங்களுக்கும், குற்றவாளிகளுக்கும் பின்னாலிருக்கும் சமூக உளவியல் காரணிகளை அலசி விடை தேட எத்தனிக்கிறார். அத்துடன் இரண்டு வெவ்;வேறு குணாதிசயம் கொண்ட முதன்மைக் கதாபாத்திரங்களை 'விசாரணை' என்ற ஒற்றைப்புள்ளியை நோக்கி நகர்த்திச் செல்லும்



வகையிலான திரைக்கதை சுவாரஸ்யத்தை கூட்டுகிறது. உதாரணமாக 'கோல்டு' மெடல் வாங்கி வெறும் படிப்பை மட்டுமே வைத்துக்கொண்டு களத்துக்கு வரும் அசோக் செல்வன் கதாபாத்திரத்தை அனுபவம் வாய்ந்த உயர் அதிகாரியான சரத்குமார் அணுகும் விதமும், இரண்டு கதாபாத்திர முரண்களும் கதையை மெருகேற்றுகின்றன. அவர்களுக்கு இடையேயான உரையாடல்களை நகைச்சுவை கலந்து எழுதியிருப்பது ஈர்ப்பு. குறிப்பாக சீரியல் கொலைகள் குறித்து சரத்குமார் விவரிக்கும் காட்சி, கொலைகாரனை நெருங்கும் காட்சியும், இடைவேளை என விறுவிறுப்புக்கு பஞ்சமின்றி கடக்கிறது முதல் பாதி.

**பாத்திரத் தெரிவுகள்**

வழிக்கப்பட்ட தாடி, மீசையுடன் படிப்பு வாசம் மாறா இளைஞராக அசோக் செல்வன் நகைச்சுவை கலந்த உடல்மொழி, ஆங்காங்கே சில வசனங்கள், அறிவுஜீவியாக காட்டிக்கொள்ள செய்யும் செயல்கள் என படம் முழுக்க ஈர்க்கிறார். துப்பாக்கியை வைத்து அவர் காட்டும் வித்தை கைதட்டல்களை அள்ளுகிறது. கடுகடுப்பான முகத்துடன் கறார் காட்டும் உயர் அதிகாரியாகவும், எமோஷனலான காட்சி ஒன்றில் முகத்திலிருந்து மொத்த நடிப்பை கடத்தும் இடத்திலும் 'மூத்த' நடிகர் என்ற முத்திரையைப் பதிக்கிறார் சரத்குமார்.

நிகிலா விமலுக்கு பெரிய பகுதி இல்லை என்றாலும், தனக்கு கொடுத்த கதாபாத்திரத்தில் நேர்த்தி காட்டுகிறார். மறைந்த நடிகர் சரத்பாபுவின் எதிர்பாராக் கதாபாத்திரத் தெரிவும், அதற்கான அவரின் நடிப்பும் யதார்த்தம். ஹரீஷ்குமார் எதிர்மறை கதாபாத்திரத்தில் மிரட்டியிருக்கிறார். தேனப்பன் கலங்கும் காட்சிகளில் கவனம் பெறுகிறார்.

**இசை, ஒளிப்பதிவு**

ஜேக்ஸ் பிஜாயின் பின்னணி இசை காட்சிப்படுத்தப்படாத கதாபாத்திரமாகவே படம் முழுக்க பயணிக்கிறது. காட்சிகளைத் தாண்டி சில இடங்களில் தனது இசையால் பயமுறுத்துபவர் சில இடங்களில் அமைதியைப் பரவ விட்டது படத்துக்கு பெரும் பலம். கலைச் செல்வன் சிவாஜியின் ஒளிப்பதிவில் இரவுக் காட்சிகள் தனித்துத் தெரிகின்றன.

முடிந்த அளவு தான் எடுத்துக்கொண்ட கதையை விறு விறுப்புக் குறையாமல் அதே வேகத்தில் இரண்டாம் பாதியிலும் கடத்த முயன்றிருக்கிறார் இயக்குநர். ஆனால், சைக்கோ த்ரில்லர் படங்கள் என்றாலே பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை மட்டும் தொடர்ந்து கொலைக் குற்றவாளிகளாகச் சித்தரிப்பதற்கான நியாயம் மட்டும் புரிவதில்லை. மற்றபடி, விறுவிறுப்பான திரைப்பட விரும்பிகளுக்கான விருந்தை 'போர் தொழில்' மசாலா குறையாமல் கொடுத்திருக்கிறது.



# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?

## உமியை எரிக்கக் கூடாது... கருக்க வேண்டும்...!

53



அரிசி ஆலைகளில் பெரும் குவியலாக நெல்லின் உமி கொட்டிக் கிடப்பதைக் காண லாம். உமியை விவசாயத் தேவைகளுக்கோ (உரம், பசளை) கால்நடைத் தீவனமாகவோ நேரடியாகப் பயன்படுத்த முடியாது. நிலத் தில் போட்டால் இலகுவில் உக்கியும் விடாது (பயிர்ச் செய்கைக் காலத்தைத் தாண்டியே உக்கலடையும்). ஆனால், இத்தகைய உமி யில் நிலத்துக்குத் தேவையான சிலிக்கா நிறைந்திருக்கிறது. அதை எவ்வாறு எடுப் பது...?

உமிக்கரியில் காணப்படும் சிலிக்கா என்ற கனிப்பொருளைப் பெறுவதற்கு உமியை எரிக்க வேண்டும். ஆனால் அது சுவாலை யாக எரியாமல் எரிக்க வேண்டும். அதாவது உமியைப் புகைந்து கருகும் விதத்தில் கரி யாக்க வேண்டும். அவ்வாறு வரும் உமிக்க ரியை நெல் வயல்களுக்கு உமிக்கரியைப் போட்டு உழுது தயார்ப்படுத்தினால் உமிக் கரியிலுள்ள சிலிக்கா நெல்லுக்கு மிகுந்த வலுவூட்டும். நெல்லின் சுணையை நன்கு வளர வைக்கும். இதனால் பூச்சிகள் நெல் லின் தண்டுப் பகுதியைத் தாக்க முடியாது. அதைவிட நெல் மணிகள் நன்கு முற்றி அதிக நிறையுடையவையாக விளையும். இதற்கு உமிக் கரியிலுள்ள சிலிக்கா மிகவும் உறுதுணையாக இருக்கும். உமிக்கரியின் சிலிக்க நல்ல பலனைத் தரும். உமியை வைத்தே விவசயாத்தில் அதிக பயனைப் பெற முடியும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781